தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 97/ந/2022
நாள். 17.10.2022

திரு.K.ஜெயபிரசாந்த்,
காரமடை. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
காரமடை நகராட்சி. – எதிர் மனுதாரர்.

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, காமராஜ் சாலை, பாரதிய ஜனதாகட்சி அலுவலகம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.ஜெயபிரசாந்த், என்பவரின் 01.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.07.2022 அன்று பெறப்பட்டு 97/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, காமராஜ் சாலை, பாரதிய ஜனதாகட்சி அலுவலகம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.ஜெயபிரசாந்த், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

- “காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்பட்ட பெரும்பாலான வணிகக் கட்டடங்களுக்கு குறைந்தளவு சொத்துவரி நிர்ணயம் செய்து, நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.
- நகராட்சி அனுமதியின்றி, காலியிடங்களில் செட்டுகளை அமைத்து வாடகை வசூலிப்பதை களப்பணியாளர் நகராட்சிக்கு தெரியப்படுத்தாமல் இருப்பதால் வருவாய் இழப்பு.
- விதிமீறி கட்டிய கூடுதல் கட்டடங்களை முறைப்படுத்தாமல், சொத்துவரி விதிப்பதால், நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.
- எனவே, உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் காரமடை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

காரமடை நகராட்சி ஆணையாளர் தனது 05.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"காரமடை நகராட்சியானது பேரூராட்சியாக இருந்து 07.12.2021 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்பு இந்நகராட்சி வருவாய் உதவியாளர்களுக்கு நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து கட்டடங்களும் சொத்துவரி விதிப்புக்கு உட்படுத்தப்படவேண்டும் என்வும், தற்போதைய நிலையில் உள்ள சதுரஅடிக்கு குறையாமல் சொத்துவரி விதிக்கப்படவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வார்டு பகுதிகளிலும் வரிவிதிப்பு இல்லாத கட்டடங்கள், அனுமதியற்ற கட்டடங்கள் மற்றும் விதிமீறிய கட்டடங்கள் குறித்து தள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சியில் நகர்புற சாதாரண உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றதால் தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி மேற்படி கணக்கீடு பணி முழுமையாக முடிக்க இயலவில்லை. மேலும் தற்போது சொத்துவரி பொது சீராய்வு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் சொத்துவரி விதிக்கப்படாமல் உள்ள கட்டடங்கள், விதிமீறிய கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற கட்டடங்கள் அனைத்தும் முழுமையாக கணக்கீடு செய்யப்பட்டு கட்டட உரிமையாளர்களிடம் சுய மதிப்பீட்டு படிவம் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளது. சொத்துவரி பொது சீராய்வு பணி முடிக்கப்பட்டதும் அனைத்து கட்டடங்களும் உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு விடுதலின்றி சொத்துவரி விதிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும், காரமடை நகராட்சி ஆணையரும் 20.09.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. ஆனால் நகராட்சி ஆணையர் 14.09.2022 நாளிட்ட கடிதத்தில் அரசு உறுதிமொழி ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், விசாரணை தேதியை மாற்ற கோரியதை ஏற்று, நகராட்சி ஆணையரை 26.09.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

(4) மனுதாரர் திரு.K.ஜெயபிரசாந்த், 20.09.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்பட்டுள்ள வணிகக் கட்டடங்களுக்கு நகராட்சி அலுவலர்கள் குறைந்த அளவு சொத்து வரி விதித்துள்ளனர். இதனால், நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. அதே போன்று கட்டட அனுமதி பெறாமலும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டங்களின் மீதும், குறைந்த

அளவு சொத்து வரிவிதிப்பு செய்துள்ள நகராட்சி அலுவலர்கள் மீதும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான குறைந்த அளவு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள், அனுமதியற்ற கட்டங்களின் விவரங்கள் மற்றும் இது தொடர்பான புகைப்படங்களை இன்னும் ஒரிரு நாட்களில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) மனுதாரர் திரு.மு.ஜெயபிரசாந்த், தனது வாக்குமூலத்தில் தெரிவித்தபடி, 20.09.2022 நாளிட்ட கடிதத்தில் குறைந்தளவு சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் விதிமீறல் கட்டடங்களின் விவரம் குறித்து புகைப்படங்களை சமர்ப்பித்துள்ளார்.

(6) 20.09.2022 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் கீழ்காணும் புகாரினை தெரிவித்துள்ளார்.

- மனோன்மணி 31, 32/1, 31/3, 31/5 F.B.காலனி காரமடை முதல் மேட்டுப்பாளையம் வரை அரசு விதிகளின்படி அனுமதி வழங்கபட வேண்டும் விதி மீறிய இரண்டாம் தளத்திற்கும் சொத்துவரி விதித்து உள்ளார்கள்.
- முருகேசன் 4, 4–1, சிவன்புரம் காலனி வேளாங்கண்ணி இந்த கட்டிடம் பேரூராட்சியாக இருக்கும் பொழுது 1900 சதுர அடிக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டது தற்போது நகராட்சியில் அனுமதி வழங்கியுள்ளார்கள். மேற்படி 4000 சதுர அடிக்கு மேல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது இதற்கும் குறைந்த அளவு சொத்துவரி விதித்து வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.
- V.P.தினகர்ராஜ், 288/1A.N. 2) C.சுஜித்ரா 288/1A கோவை – மேட்டுப்பாளையம் ரோடு நகராட்சியின் அனுமதியுடன் திருமண மண்டபம் கட்டியுள்ளார்கள் இதில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்நாள் வரை சொத்துவரி ஏதும் விதிக்கப்படவில்லை, இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு கொண்டிருக்கிறது. மேற்படி நகராட்சியில் அனுமதி வழங்கப்பட்ட கட்டிடங்கள், விதிகளை மீறி அனுமதி அளித்ததற்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டி வருகிறார்கள். அதற்கு குறைந்த அளவே சொத்துவரி விதித்து வருவாய் இழப்பு ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தாங்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

(7) எதிர்மனுதாரரான காரமடை நகராட்சி ஆணையாளர் 26.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரரின் 20.9.2022 நாளிட்ட மனுவின் நகலை இன்று இம்முறை மன்றத்தில் பெற்றுக்கொண்டேன். மனுதாரர் தனது மனுவில் கண்டுள்ள புகார்கள் குறித்த விவரங்கள் அதாவது காரமடை நகராட்சியில் கட்டட அனுமதி வழங்கப்பட்ட அளவிற்கு மேல் கட்டடம் கட்டப்பட்டு அதற்கு சொத்து வரி விதிக்கப்பட்டது குறித்த விவரங்ளை இன்னும் ஒரு வார காலத்திற்குள் இம்முறை மன்றத்தில் சமர்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் காரமடை நகராட்சியில் சொத்து வரி விதிக்கப்படாமல் உள்ள கட்டடங்கள், விதி மீறிய கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற கட்டடங்கள் முழுமையாக கணக்கெடுப்பு செய்து,

அவற்றிற்கு உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு சொத்து வரி விதிக்கப்படும் எனவும், இப்பணி இன்னும் 3 மாத காலத்திற்குள் முடிக்கப்படும் எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 5.9.2022 நாளிட்ட எனது கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(8) காரமடை நகராட்சி ஆணையாளர் தனது 30.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் 20.09.2022 நாளிட்ட புகார் மனுவிற்கு கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

(i) திரு.அ.மனோன்மணி என்பவருக்கு காரமடை கிராமம் க.ச.எண்.217/2, மனை எண்.31/Part இ.பி.காலனி என்ற இடத்தில் 1340 சதுரடி பரப்பளவு உள்ள இடத்தில் தரை கீழ் தளம் 1084 சதுரடி, தரை தளம் 1084 சதுரடி, முதல் தளம் 1084 சதுரடி பரப்பளவில் குடியிருப்பு வணிக கட்டடம் கட்ட விண்ணப்பம் ந.க.எண். 1648/2021/அ2 நாள்.30.11.2021–ல் கட்டிட அனுமதி காலம் 30.11.2021 முதல் 29.11.2026 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு 29.12.2021 முதல் வரிவிதிப்பு எண்கள்.15821, 15822, 15823, 15824, 15825ல் முறையே 1084, 1084, 616, 370, 1084 என மொத்தம் 4238 சதுரடிக்கு உரிய சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக இரண்டாம் தளம் கட்டிடத்திற்கு அபராத கட்டணமாக ரூ 16706/– வசூலிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மனுதாரர் கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 205 (1) (2) மற்றும் (3) வது பிரிவின் கீழ் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ii) திரு.வி.முருகேசன் என்பவர் காரமடை கிராமம் க.ச.எண்.706 மனை எண். 4/Part மேட்டுப்பாளையம் – கோவை மெயின் ரோடு பகுதியில் 5860 சதுரடி பரப்பில் அமைந்துள்ள இடத்தில் தரைத்தளம் 178.37 சதுர மீட்டர் பரப்பளவில் வணிக உபயோக கட்டடம் கட்ட கட்டிட விண்ணப்பம் எண்.909/2016/அ3, கட்டிட உரிம எண். 182/2016–17 நாள் 22.09.2016ல் அனுமதி காலம் 22.09.2016 முதல் 21.09.2019 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு 19.03.2022 முதல் வரிவிதிப்பு எண்கள் 15919 மற்றும் 15920ல் முறையே 2849, 2849 என மொத்தம் 5698 சதுரடிக்கு 2019–2020 முதல் அரையாண்டு முதல் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 205 (1) (2) மற்றும் (3)ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(iii) திருமதி.சி.சுஜித்ரா க/பெ. தியாகராஜ் என்பவர் காரமடை கிராமம் க.ச.எண்.288–1A கோவை – மேட்டுப்பாளையம் சாலையில் தரைதளம் 1990 சதுரடி பரப்பில் வணிக கட்டடம் கட்ட கட்டிட விண்ணப்ப ந.க.எண்.1460/2022/அ2, கட்டிட உரிம எண்.145/2022–23 நாள்.02.06.2022 கட்டிட அனுமதி காலம் 02.06.2022 முதல் 01.06.2027 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி காலி இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டுமான அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 205 (1) (2) மற்றும் (3) பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பத்தி எண்.1, பத்தி எண்.2ல் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களுக்கு கட்டிட உரிமத் தொகையும், சொத்துவரியும் பெறப்பட்டுள்ளதாலும், பத்தி எண்.3ல் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு கட்டிட உரிமத் தொகை பெறப்பட்டுள்ளதாலும், தற்போது சொத்துவரி சீராய்வு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் சொத்துவரி விதிக்க இயலாத நிலையில், இப்பணி நிறைவுற்றவுடன் சொத்துவரிக்கு உட்படுத்தி பெறப்படும் என்பதாலும், கூடுதலான கட்டுமானங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 205 (1) (2) மற்றும் (3) பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனால் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வருவாய் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதனை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், காரமடை நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கோயம்புத்தூர், காரமடை நகராட்சியைச் சார்ந்த மனுதாரர் முதலில் தனது 01.07.2022 நாளிட்ட மனுவில் காரமடை நகராட்சிக்குட்பட்ட பெரும்பாலான வணிகக் கட்டடங்களுக்கு குறைந்தளவு சொத்துவரி விதிக்கப்பட்டதன் மூலம் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக வணிகக்கட்டடங்களை குறிப்பிட்டு தெரிவிக்காமல் பொதுவாக புகாரினை தெரிவித்ததை, தொடர்ந்து தனது 20.09.2022 நாளிட்ட மனுவில் காரமடையை சார்ந்த திருவாளர்கள் மனோன்மணி, வி.முருகேசன் மற்றும் திருமதி.சி.சுஜீத்ரா ஆகியோர் காரமடை நகராட்சியால் கட்டடம் கட்ட அனுமதி அளித்ததைவிட கூடுதல் பரப்பளவில் கட்டடங்கள் கட்டியுள்ளார்கள் என்பதையும், அதற்கு குறைந்தளவே சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்பதையும் விதிமீறல் கட்டடங்களையும் குறிப்பிட்டு, புகாராக தெரிவித்து, சம்மந்தப்பட்ட நகராட்சியின் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

காரமடை நகராட்சியில் நகர் புல எண் 217/2, மனை எண் 31–ல் நில உரிமையாளர் திரு.அ.மனோன்மணி என்பவருக்கு மேற்காணும் இடத்தில் தரைகீழ்தளம், தரைதளம் மற்றும் முதல்மாடி என தலா 1084 சதுரடியில் குடியிருப்பு வணிக கட்டடத்தினை 30.11.2021 முதல 29.11.2026–க்குள் கட்டிமுடிக்க நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட நிலையில், 29.12.2021 முதல் காரமடை நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட பரப்பளவைவிட கூடுதலாக மொத்தம் 4244 சதுரடியில் கட்டிய கட்டடத்திற்கு, நகராட்சியால் கட்டடம் கட்ட அனுமதியளித்த அடுத்த மாதத்திலேயே சொத்துவரி விதிக்கப்பட்டதன் மூலம், கட்டடட உரிமையாளரால், நகராட்சியின் அனுமதியின்றி கட்டடம் கட்டி வந்துள்ளது ஆவணத்தின் மூலம் தெளிவாகிறது. இச்செயலானது காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை நகராட்சியின் ஆணையர், நகரமைப்பு பிரிவு அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் ஆகியோர் கண்காணிக்காத நடவடிக்கையானது அவர்களது அலட்சியப்போக்கினையே காட்டுகிறது.

மேலும் மனுதாரர் புகாராக தெரிவித்துள்ளபடி, காரமடை கிராமம், புல எண்.706, மனை எண். 4 பார்ட் திரு.வி.முருகேசன் என்பவருக்கு நகராட்சியால் 22.09.2016ல் முதல் 21.09.2019 வரை கட்டடம் கட்ட அனுமதியளிக்கப்பட்ட 178.37 சதுர மீட்டரைவிட கூடுதலாக மொத்தம்

5698 சதுரடியில் கட்டிய வணிகக் கட்டடத்திற்கு, காலதாமதமாக 19.03.2022 முதல் 5698 சதுரடிக்கு 2019 – 2020, முதல் அரையாண்டுக்கான சொத்துவரி விதிக்கப்பட்டதன் வாயிலாக நகராட்சி ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மெத்தனப் போக்கு மற்றும் உடந்தைமுறைகேடான கட்டடம் கட்ட உறுதுணையாக இருக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

இதே போன்றே திருமதி.சி.சுஜித்ரா என்பவரால் புல எண். 288/1A–ல் 1990 சதுரடி பரப்பளவில் வணிகக் கட்டடம் 02.06.2022 முதல் 01.06.2027 வரையுள்ள காலத்திற்குள் கட்ட நகராட்சியால் 02.06.2022 நாளிட்ட ஆணையில் அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி நிலத்தில் நகராட்சியின் அனுமதியின்றியும், கூடுதல் பரப்பளவில் கட்டட உரிமையாளரால் கட்டிய கட்டடத்திற்கு, சொத்துவரி சீராய்வு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இப்பணி முடிந்தவுடன் மேற்காணும் கட்டடத்திற்கு சொத்துவரி விதிக்கப்படும் என காரமடை நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவிப்பது ஏற்க இயலாது. மேலும், மேற்கண்ட கட்டடமானது மனுதாரரால் திருமண மண்டபம் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வணிக கட்டட அனுமதி 1990 சதுரடிக்கு வழங்கியுள்ள நிலையில் இதில் பெரிய முறைகேடு நடைபெற்றிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும் இக்கட்டடமானது திருமண மண்டபமா அல்லது வணிகக் கட்டடமா என்பது குறித்து ஆணையர் தனது அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை. மனுதாரர் தெரிவித்துள்ளவாறு திருமண மண்டபமாக இருக்கும் பட்சத்தில் இதன் பரப்பிற்கு ஏற்ப அனுமதியளிக்கும் அதிகாரம் நகர ஊரமைப்பு துறை (DTCP) மற்றும் நகராட்சிக்கு உள்ளது. இதில் கூடுதல் பரப்பளவு கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் விதிமீறி கட்டப்பட்ட கட்டடத்திற்கு ஆணையாளரால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாதது மிகவும் கண்டிக்கதக்கதாகும். மேலும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு புறம்பாகவும், விதிமீறியும் கட்டிய கட்டத்திற்கு சொத்துவரி விதிக்கப்படாமல் இருப்பது நகராட்சி ஆணையாளரின் பொறுப்பற்ற செயலினையும், பெரும் வருவாய் இழப்பிற்கு காரணமாக இருப்பதையும் காட்டுகிறது.

மனுதாரால் 20.09.2022 நாளிட்ட மனுவில் புகாராக தெரிவித்துள்ள மேற்காணும் விதிமீறல் கட்டடங்களுக்கு, நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாகவும், கூடுதலாகவும், விதிமீறி கட்டிய கட்டடங்களை அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின்படி மாற்றி அமைக்கவும் இடித்து அப்புறப்படுத்தவும் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 206 (1) மற்றும் (2)ன் கீழ் நகராட்சியால் இந்நாள்வரை முதல்அறிவிப்பு (நோட்டீஸ்) வழங்கப்படாமல் உள்ளதையும், தொடர்ந்து மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளாததையும் ஆவணங்களின் மூலம் ஊர்ஜிதமாகிறது. இச்செயலை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

இதில் சம்பந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் ஆணையாளர்கள் மற்றும் பொறுப்பு அலுவலர்கள் அனைவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் ஏற்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேற்காணும் நேர்வுகளில் கடமைதவறி பணியாற்றியுள்ள மற்றும் மெத்தனமாகவும் அலட்சியமாகவும் செயல்பட்ட காரமடை நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு

பிரிவு அலுவலர்கள், களப்பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் தனது 01.07.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார் தொடர்பான, காரமடை நகராட்சிக்குட்பட்ட சொத்துவரி விதிக்கப்படாத, விதிமீறி மற்றும் அனுமதியற்ற கட்டடங்களை கண்டறிந்து மூன்று மாதங்களுக்குள் உரிய விதிகளின் கீழ் சொத்து வரியினை விதிக்கும் பணியினை முடித்து, அதன் அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு காரமடை நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.K.ஜெயபிரசாந்த்,
பாரதிய ஜனதா கட்சி அலுவலகம்,
காமராஜ் சாலை, காரமடை 641 104,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2) ஆணையாளர், காரமடை நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலருக்காக

18/10/22